# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூலை 11, 2026

Weekly E-paper ● July 11, 2026





# முகம் சுழிக்க வைத்த முதலமைச்சரின் பேச்சு!

சுப.வீரபாண்டியன்

அறநிலையத் துறையின்
## அவசியத்தை உணர்த்திய அயோத்தி !
வழக்கறிஞர் இராம. வைரமுத்து

## திறந்திடு சீசே...!
தலையங்கம்

## நம் வரலாறை மீட்டெடுத்தாலே வெற்றிதான்
சொக்கலிங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜுலை 11, 2026 Weekly E-paper ● July 11, 2026


# முகம் சுழிக்க வைத்த முதலமைச்சரின் பேச்சு!

சுப.வீரபாண்டியன்

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, திரு விஜய் பேசிய இரண்டாவது பொதுக்கூட்டம் நேற்று (10-07-2026) கரூரில் நடைபெற்றது!

முதலமைச்சர் பதவியின் தரத்திற்கும், கண்ணியத்திற்கும் ஏற்ற வகையில் அவருடைய பேச்சு இருக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு அது ஒரு பெருத்த ஏமாற்றம் என்றே சொல்ல வேண்டும்!

"திருட்டு திமுக", "கூட்டுக் களவாணிகள்" போன்ற தொடர்களை அவர் தன் பேச்சில் பயன்படுத்தினார். வேட்டைக்காரனாகிய தன்னைப் பார்த்து, எதிர்க் கட்சியினர் ஓடு ஓடு ஓடு என்று ஓடுகிறார்கள் என்றார். எல்லாவற்றையும் தாண்டி "கொளத்தூர் மக்கள் கொத்து புரோட்டா" போட்டுவிட்டார்கள் என்று வேறு பேசினார்!

30 ஆண்டுகளுக்கு முன்னால், அவர் நடித்த விஷ்ணு என்னும் திரைப்படத்தில், "தொட்டபெட்டா ரோட்டு மேல முட்டை பரோட்டா, தொட்டுக்கொள்ள சிக்கன் தரட்டா" என்று ஒரு பாடல் வரும்! ஆபாசமாக உடை உடுத்திய ஒரு பெண்ணுடன் அன்றைய நடிகர் விஜய் அந்தப் பாடலுக்கு நடனமாடுவார். அந்த நடனத்தின் நடுவே, இந்தப் பாடலைப் பாடியவர் விஜய் என்று எழுத்துகள் வரும்! இன்னும் அந்தத் தரத்தில் இருந்து அவர் மீண்டு வரவில்லை என்பதைத்தான், "கொளத்தூரில் கொத்து பரோட்டா" பேச்சு உறுதிப்படுத்துகிறது!

அனைவரிடமும் அன்புகாட்டியும், எதிர்க்கட்சிகளையும் கூட அரவணைத்தும், உயரத்தில் நின்று பேச வேண்டிய ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், அந்தக் கட்சியின் நான்காம் தரப் பேச்சாளர் போலப் பேசி முடித்திருக்கிறார்!

இவற்றைத் தாண்டி, அவர் பேசிய பேச்சில் எத்தனை செய்திப் பிழைகள் இருக்கின்றன என்பதை, நேற்றும், இன்றும் சமூக வலைத்தளத்தில் ஏராளமானவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்!

தேர்தல் முடிந்து தவெக ஆட்சிக்கு வந்துவிட்டது என்பது திமுகவிற்கு நினைவு இருக்கிறதா என்று அவர் கேட்கிறார். தேர்தல் முடிந்து, தானும் வெற்றி பெற்று முதலமைச்சராகி விட்டோம் என்பது இவருக்கு நினைவு இருக்கிறதா என்று நமக்குத் தெரியவில்லை!

பொதுவாக வெற்றி ஆணவத்தைக் கொண்டு வரும் என்பதை நாம் அறிவோம்! ஆனாலும் இவ்வளவு ஆணவம் கூடாது!







முதலமைச்சரின் அப்பா சந்திரசேகர், ஒரு படத்தில் பாடல் காட்சியில் நடித்திருப்பார். அதில் அவர் பாடும் பாட்டின் தொடக்க வரிகள், "ஆடாதடா ஆடாதடா மனுஷா" என்பது!

தொலைநோக்குப் பார்வையோடு, அவர் தன் மகனுக்கு அப்போதே பாடியிருக்கிறார் போல் இருக்கிறது!

●

# அறநிலையத் துறையின் அவசியத்தை உணர்த்திய அயோத்தி !

**வழக்கறிஞர் இராம. வைரமுத்து**

தமிழ்நாட்டில் திருக்கோவில்கள் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பா.ஜ.க பின்பலம் கொண்டவர்களால் தொடர்ச்சியாக வைக்கப்பட்டு வருகிறது. அதன் சூழ்ச்சி புரியாத பக்தர்கள் சிலரும் அதை ஆதரித்து வருகிறார்கள். தமிழ்நாடு அரசின் இந்துசமயஅறநிலைத்துறைதிருக்கோவில்களைநிர்வகிக்கும் பொறுப்பில் இருந்து வெளியேறி அத்திருக்கோவில்கள் தனியார் அறக்கட்டளை வசம் ஒப்படைக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பதையும், அறநிலையத்துறையின் அவசியத்தையும் நமக்கு அண்மையில் நடந்த அயோத்தி ராமர் கோவில் காணிக்கை ஊழல் நமக்கு உணர்த்தி இருக்கிறது.

அயோத்தி ராமர் கோயிலுக்கு பக்தர்கள் அளித்த நன்கொடை, காணிக்கை பணம் திருடப்பட்டதன் மூலம் சுமார் ரூ.200 கோடி வரை மோசடி செய்யப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக விசாரிக்க உத்தரப்பிரதேச அரசு 15.06.2026 அன்று சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்தது.



மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி விஜய் விஷ்வாஸ், மூத்த ஐ.பி.எஸ் அதிகாரி கிரண், நிதித்துறை சிறப்பு செயலாளர் நீல் ரத்தன் ஆகியோர் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவினர் ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை நிர்வாகிகள், மூத்த அதிகாரிகள், ஊழியர்களிடம் தீவிர விசாரணை நடத்தி 23.06.2026 அன்று உத்தரப்பிரதேச அரசுக்கு 20 பக்க அறிக்கையை அளித்தது.

காணிக்கை பெட்டி பொறுப்பாளர் ராம்சங்கர், காணிக்கை பணம் எண்ணும் பிரிவில் பணிபுரியும் அனுகல்ப் மிஸ்ரா, லவகுஷ் மிஸ்ரா, சுபாஷ் சந்திர வஸ்தவா, கருணேஷ் பாண்டே, மணீஷ், அவினாஷ் சுக்லா, ராம்சங்கர் மிஸ்ரா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ரூ.79.85 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதையடுத்து ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய், அறங்காவலர் அனில் மிஸ்ரா ஆகியோர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர். அதன் பிறகு நடைபெற்ற அறக்கட்டளைக் கூட்டத்தில் ஓய்வு பெற்ற ஐ.எப்.எஸ் அதிகாரியும் அறக்கட்டளை உறுப்பினருமான கிருஷ்ண மோகன் தற்காலிக பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அப்பாவி பக்தர்களின் மதவெறியை தூண்டி, அடுத்த மதத்தினரின் வழிபாட்டு தளத்தை இடித்து, அந்நிலத்தை அபகரித்து கட்டப்பட்ட இக்கோவிலில் பால ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட போது நேரில் சென்ற பிரதமர் மோடியோ, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தோ தற்போது வரை இக்கோவில் காணிக்கை ஊழல் குறித்து வாய் திறக்கவில்லை.

அயோத்தி ராமரை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தி ஆட்சியை கைப்பற்றிய பா.ஜ.கவின் தேசிய தலைவர் நிதின் நபின் "ராமர் கோவில் காணிக்கை திருட்டு விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் இந்து மத நம்பிக்கையை இழிவுபடுத்துகின்றன. அவர்கள் ஒரு காலத்தில் ஸ்ரீராமரின் இருப்பைக் கேள்வி கேட்டு ராமர் கோவில் இயக்கத்தை எதிர்த்த வரலாற்றைக் கொண்டவர்கள். ஆகவே எதிர்க்கட்சிகள் இதைபற்றிப் பேசுவது வேடிக்கையானது" என்று கூறியுள்ளார். இதன் மூலம் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை திசை திருப்பி இந்த விவகாரத்தை மூடி மறைக்க பா.ஜ.க முயல்வது வெட்ட வெளிச்சம் ஆகி உள்ளது.

அதேபோல் "எங்கப்பன் குதிருக்குள் இல்ல" என்ற கதையாக ஆடிட்டர் குருமூர்த்தி இது தொடர்பாக "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையில் "இது வெறும் திருட்டு மட்டுமே. ஊழலோ மோசடியோ அல்ல. பிற மாநிலங்களிலுள்ள அரசு அறநிலையத்துறையை விட வேகமாக இந்த விவகாரத்தில்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## திறந்திடு சீசே...!

கடந்த 'திராவிட மாடல்' ஆட்சியின் போது திமுக அரசையும், அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் கடுமையாக விமர்சித்த பாஜக, தவெகவின் இன்றைய ஆட்சியைப் பற்றி அப்படி எல்லாம் விமர்சனம் செய்வதில்லை. ஏதோ பட்டும்படாமல் அவ்வப்போது பேசுவார் நயினார் நாகேந்திரன்.

மாநில அரசின் உரிமைகளை ஒன்றிய பாஜக அரசு பறிக்கும் போதுகூட பாஜகவுக்கு எதிராக ஒருவார்த்தை கூடப் பேசுவதில்லை, இன்றைய முதல்வர் விஜய்.

அவரின் பதவி ஏற்பின்போது முதலில் வந்தேமாதரம், இரண்டாவது ஜனகனமன பாடியபின் கடைசியில்தான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்பட்டது. இங்கு தமிழ்த்தாய் வாழ்த்து என்பது அடிப்படையில் மாநில உரிமை.

இந்தி மொழிவழியாக சமஸ்கிருதத்தைத் திணிக்கும் முயற்சியில் பாஜக ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டது புதிய கல்விக் கொள்கை. பேரறிஞர் அண்ணாவின் இரு மொழிக் கொள்கையில் உறுதியாய் இருக்கும் திமுக அரசு, ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்கமாட்டோம் என்று திட்டவட்டமாகக் கூறிப் புறக்கணித்து விட்டது. விஜயின் இன்றைய அரசு, நாங்கள் இருமொழிக் கொள்கையை ஏற்கிறோம். ஆனால் புதிய கல்விக் கொள்கையைப் பரிசீலனை செய்கிறோம் என்கிறது. இருமொழி என்பது அடிப்படையில் மாநில உரிமை.

துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுக்கும் தேடுதல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழுவின் பிரதிநிதியைச் சேர்க்க அன்றைய ஆளுநர் ஆர்.என். ரவி வலியுறுத்தியதை திமுக அரசு மறுத்துவிட்டது. பல்கலைக்கழக வேந்தராக மாநில முதலமைச்சரே இருக்க வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றியது திமுக அரசு.

ஆனால் இன்றைய தவெக அரசு துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுக்கும் தேடுதல் குழுவில் பல்கலைக்கழக மானியக்குழுவின் உறுப்பினரைச் சேர்க்க ஒப்புதல் தந்து, ஆளுநரின் அதிகாரத்திற்கு வழிவகுத்து விட்டது.

காவிகளுக்காகத்தமிழ்நாட்டின் கதவுகள் 'திறந்திடு சீசே' எனத்திறக்கப் படுகின்றன.

இதுகுறித்துமுதல்வர்நேரடியாகவாயேதிறக்காமல் இருக்கிறார், ஏன்?

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

உதவி ஆசிரியர்:
**வெற்றிச்செல்வன்**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

இக்கோவில் அறக்கட்டளை நடவடிக்கை எடுத்துள்ளது" என்று சப்பைக்கட்டு கட்டியுள்ளார்.

ஆயினும் அவரது கட்டுரையில் "ஜூன் 4 ஆம் தேதி காணிக்கை திருட்டு பற்றி தெரிய வந்தது. ஜூன் 5 ஆம் தேதி அறக்கட்டளை பொதுச் செயலாளர் சம்பத் ராய் உள்விசாரணைக்கு உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து அங்கு பணியாற்றும் அவினாஷ் சுக்லா வீட்டில் இருந்து காவல்துறை வருவதற்கு முன்பே ரூ.58 லட்சம் கைப்பற்றப்பட்டது. உள்விசாரணை மூலம் திருடு போன பணத்தை முழுமையாக மீட்க முடியும் என்று ஜூன் 7 ஆம் தேதி சம்பத் ராய் முடிவெடுத்திருந்த நிலையில் இந்த விவகாரம் பூதாகரமானதால் ஜூன் 13 ஆம் தேதி சிறப்பு புலனாய்வு குழு அமைக்குமாறு உத்தர பிரதேச மாநில அரசுக்கு அறக்கட்டளை கோரிக்கை விடுத்தது" என்று குறிப்பிட்டுள்ளதன் மூலம் விசாரணையை அறக்கட்டளை நிர்வாகம் ஏறத்தாழ 10 நாட்கள் தாமதப்படுத்தி உள்ளது என்பது புலனாகிறது. இந்த காலகட்டத்தில் முக்கிய தடயங்கள் அழிக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

முழுமையாக விசாரணை முடிவடையாத தருணத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அறக்கட்டளை பொருளாளர் கோவிந்த் கிரி "பொதுச் செயலாளர் சம்பத் ராய் எந்த தவறும் செய்யவில்லை. அவர் சார்ந்த நபர்கள் மட்டுமே தவறுகளை செய்துள்ளனர்" என்று கூறியிருப்பதன் மூலம் இந்த விவகாரத்தில் கோவில் பணியாளர்களை மட்டும் பலிகடாவாக்கி விட்டு இதன் பின்னணியில் உள்ள முக்கிய நபர்களையும், இந்துத்துவா அமைப்புகளையும் காப்பாற்றும் நடவடிக்கையில் அறக்கட்டளை நிர்வாகம் ஈடுபடுகிறதோ என்ற பலத்த சந்தேகம் எழுகிறது.

"கோவில், கொடியவர்களின் கூடாரமாக மாறி விடக் கூடாது" என்ற தலைவர் கலைஞர் அவர்களின் வரிகளுக்கு ஏற்ப, உச்சநீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் விசாரணை நடத்தப்பட்டு இந்த சதிச் செயலில் ஈடுபட்ட அனைவரும் தண்டிக்கப்படுவதுடன் தனியார் அறக்கட்டளை வசமிருக்கும் அயோத்தி ராமர் கோவில் அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அப்போது தான் பக்தியின் மீதும், நீதியின் மீதும் மக்கள் வைத்திருக்கும் கடைசி நம்பிக்கை காப்பாற்றப்படும். ●

# நம் வரலாறை மீட்டெடுத்தாலே வெற்றிதான்

## சொக்கலிங்கம்

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில், பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தின் அரசியல் தொடர்ச்சியாக திமுக உருவானது. நீதிக்கட்சி வகுத்த பாதையையும், சுயமரியாதை இயக்கம் வலுப்படுத்திய கொள்கைகளையும் அது பின்பற்றியது. சமூக நீதிக்கான செய்தியை மக்களிடம் கொண்டு சேர்த்த திமுக, சமூகத்தில் நிலவிய கட்டமைப்பு ரீதியான ஏற்றத் தாழ்வுகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. 1967 இல் ஆட்சிக்கு வந்த திமுக, அந்தச் சித்தாந்தத்தை நடைமுறை நிர்வாகமாக மாற்றியது. நலத்திட்டங்கள்,சமூகச்சீர்திருத்தங்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி கொள்கைகள் மூலம் லட்சக்கணக்கான மக்களை திமுக முன்னேற்றியது.



இருப்பினும், 1969 இல் பேரறிஞர் அண்ணா மறைந்த பிறகு அரசியல் சூழல் கணிசமாக மாறியது. சமூக ரீதியாக விளிம்புநிலைப் பின்னணியிலிருந்து வந்த கலைஞர், முதலமைச்சராகவும் திமுகவின் தலைவராகவும் பொறுப்பேற்றார். அவரது தலைமையின் கீழ், சமூக நீதி மற்றும் பார்ப்பனரல்லாதோரின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் முதன்மையான மக்கள் இயக்கமாகத் திமுக உருவெடுத்தது. தமிழ்நாடு முழுவதும் இவ்வியக்கம் தனது செல்வாக்கை விரிவுபடுத்தியபோது, பெரியாருக்கு எதிரான எதிர்ப்பைவிட, கலைஞருக்கும் திமுகவுக்கும் எதிரான எதிர்ப்பு படிப்படியாக வலுப்பெற்றது. ஒரு சக்திவாய்ந்த தேர்தல் மற்றும் சமூக சக்தியாக திமுக வளர்ந்தபோது, அரசியல் அதிகாரத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தால் அதிர்ச்சியடைந்த ஆதிக்க சக்திகளிடமிருந்து இயல்பாகவே எதிர்ப்பு கிளம்பியது.

பல தசாப்தங்களாக, டெல்லியின் உதவியுடன் திமுகவுக்குள் பல பிளவுகள் ஏற்படுத்தப்பட்டன. அதே வேளையில், திமுகவுக்கு எதிரான கருத்துருவாக்கங்கள் (Anti-DMK Narratives) அரசியல் களத்தில் தொடர்ந்து நீடித்ததோடு, காலத்திற்கேற்ப உருமாற்றமும் அடைந்தன. 2026 காலகட்ட நிலையிலும், இத்தகைய கருத்துக்கள் பொதுமக்களின் எண்ண ஓட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று,திமுக தனது சொந்த வரலாற்றை ஒரு நிறுவனமயமாக்கப்பட்ட வடிவத்திலோ அல்லது பரவலான மக்கள் வரலாறாகவோ நிலைநிறுத்தத் தவறியதே ஆகும். அந்த வரலாறு திறம்படக் கற்பிக்கப்படவில்லை அல்லது அடுத்தடுத்த தலைமுறையினருக்கு அது போதுமான அளவு கொண்டு சேர்க்கப்படவில்லை. இன்று, Gen Z தலைமுறையைச் சேர்ந்த பலர், இவ்வியக்கம் உருவானதற்கான வரலாற்றுப் பின்னணியைப் புரிந்து கொள்ளாமலேயே, தற்கால திமுக-எதிர்ப்பு கருத்துக்களுக்கு ஆளாகின்றனர். இது ஒரு தீவிரமான சவாலாகும்.

இச்சவாலை எதிர்கொள்ள, அண்ணா மற்றும் இவ்வியக்கம் குறித்த உணர்வுபூர்வமான மற்றும் ஊக்கமளிக்கும் கதைகளை திமுக உருவாக்க வேண்டும்; அத்துடன், அவற்றை மக்களிடம் வலுவாகக் கொண்டு சேர்க்கவும் வேண்டும். பெருமிதம், மரியாதை மற்றும் ஒருவிதமான பிணைப்பு உணர்வை ஏற்படுத்தும் வகையிலான கதைகளாக அவை இருக்க வேண்டும். சே குவேரா போன்ற உலகளாவிய அரசியல் ஆளுமைகளோ அல்லது ஜவஹர்லால் நேரு போன்ற தேசியத் தலைவர்களோ அவர்களின் முக்கிய நிகழ்வுகள் மூலம் நினைவுகூரப்படுவதைப் போலவே, திமுகவும் அண்ணாவின் மரபுச் சிறப்பை மறக்க முடியாத கதைகள் மற்றும் சாதனைகள் வாயிலாக முன்னிலைப்படுத்த வேண்டும். அண்ணாவின் சர்வதேச அங்கீகாரம், போப் ஆண்டவருடனான அவரது சந்திப்பும் மோகன் ரானடேவின் விடுதலையும், மத்திய-மாநில உறவுகள் குறித்த விவாதங்களை வடிவமைப்பதில் திமுகவின் பங்கு மற்றும் தேசிய அளவில் திமுகவின் கொள்கைசார் பங்களிப்புகள் ஆகியவை இதற்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.

சொல்லப்படாத வரலாறு, எதிர்ப்பாளர்களால் மாற்றி எழுதப்படும் வரலாறாக மாறிவிடுகிறது. எனவே, திமுக இயக்கத்தின் வரலாற்றை மீட்டெடுப்பதே நம் கண் முன்னால் உள்ள பணி. இளைய தலைமுறையினரை ஈர்க்கும் வகையில் அதை எடுத்துரைப்பது, அண்ணாவின் பாரம்பரியம் மற்றும் கலைஞரின் மேதமையுடன் நீடித்த உணர்வுபூர்வமான மற்றும் அறிவுசார் பிணைப்பை உருவாக்குவது, மற்றும் ஒவ்வொரு தொண்டரும் இயக்கத்தின் பயணத்தை விவரிப்பவராக மாறுவதை உறுதி செய்வது ஆகியவையே அப்பணிகளாகும்.

வலுவான டிஜிட்டல் தகவல் தொடர்பு மற்றும் தொடர்ச்சியான களப்பணி ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் மட்டுமே, திமுக தனது வரலாற்றை வெற்றிகரமாக மீட்டெடுக்கவும், விரோதமான கருத்துக்களை எதிர்கொள்ளவும், எதிர்காலத்திற்காக இயக்கத்தை வலுப்படுத்தவும் முடியும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian